| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண் .121/2022 | வா. சா .1 | தேதி.14.02.2023 | |
| பெயர் | திரு. வெள்ளிங்கிரி | வயது | 50 |
| க/பெ. | திரு.சின்னமாரன் | முகவரி | 14 ஈ, ஸ்ரீ ரங்கராயன் ஓடை, வெள்ளிப்பாளையம் ரோடு |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. நான் தற்போது 14 ஈ, ஸ்ரீரங்கராயன் ஓடை, வெள்ளிப்பாளையம் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அது சொந்த வீடு. அந்த வீட்டில் நானும், என் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் குடியிருந்து வருகிறோம். எனது பெரிய மகன் பெயர் விஜயானந்த் வயது 19. இளைய மகன் பெயர் வசந்தகுமார் வயது 14. என் தாயார் பெயர் ரங்கம்மாள். என் பாட்டி பெயர் ராமாள். அய்யாக்குட்டிக்கும், ராமாளுக்கும் மொத்தம் 3 ஆண் பிள்ளைகள். ராமன், சின்னமாரன், சுப்பன். அதில் என் பெரியப்பா ராமனை நான் பாத்த‌ததில்லை. எனக்கு சிறு வயதாக இருக்கும் போது அவர் இறந்துவிட்டார். அதனால் எனக்கு அவர் ஞாபகமில்லை. என் அப்பா சின்னமாரனுக்கும், பெரியப்பா ராமனுக்கும் என்ன வயது வித்தியாசம் என்றால் ஒரு 10 வயதிற்குள் இருக்கும்.

2. நான் தாக்கல் செய்துள்ள மூன்றாவது வழக்கு இதுவென்றால் சரிதான். இதே சொத்து குறித்து ஏற்கனவே நான் அசல் வழக்கு எண்.319/2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு அசல் வழக்கு எண்.174/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் இந்த வழக்கிலும் அய்யாகுட்டிக்கும், ராமாளுக்கும் மேற்கண்ட் மூன்று ஆண் பிள்ளைகள் தானென சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது பெரியப்பா ராமன் அய்யாகுட்டியின் முதல் மனைவியாகிய சின்னமாளுக்கு பிறந்தவர் என்றும், எனது அப்பாவும் சுப்பனும் மட்டும்தான் ராமாளுக்கு பிறந்தவர்கள் என்றும் சொன்னால் சரியல்ல, சின்னமாளுக்கும்,இதற்கும் சம்மந்தம் கிடையாது. என் பெரியப்பா ராமன் ராமாளுக்கு பிறந்தவர் அல்ல என்றும், வேறு ஒரு பெண்ணுக்கு பிறந்தவர் என்றும் சொன்னால் சரிதான்.

3. ஆனால் நான் தாக்கல் செய்த மூன்று வழக்குகளிலும் இந்த விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் மூன்று வழக்குகளின் வழக்குமூலங்களும் தவறு என்றும், அந்த காரணத்திற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. என் பெரியப்பா ராமனின் தாயார் உயிருடன் உள்ள போதே எனது தாத்தா அய்யாகுட்டி எனது பாட்டி ராமாளை திருமணம் செய்துகொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அதனால் என் பாட்டி ராமாள் அய்யாகுட்டியின் சட்டப்படியான மனைவியல்ல என்றும், எனது அப்பாவும், சித்தப்பாவும் அய்யாகுட்டியின் சட்டப்படியான வாரிசுகள் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து எனது தாத்தா அய்யாகுட்டிக்கும், அவரது முதல் மனைவியாகிய சின்னம்மாளுக்கும்தான் பாத்தியப்பட்டதென்றும், அவர்களை தொடர்ந்து அவர்களது மகனாகிய ராமனுக்கும், அவரை தொடர்ந்து அவரது வாரிசுகளுக்கும்தான் பாத்தியப்பட்டதென்றும், எனது பாட்டிக்கோ எனது அப்பா மற்றும் சித்தப்பாவிற்கோ , அவர்களது வாரிசுகளுக்கோ பாத்தியப்பட்டதல்ல தென்றும் சொன்னால் சரியல்ல.

4. எனது சித்தப்பா சுப்பன் ஹோட்டல் கடையில் சர்வராக இருந்தார். அவர் காரமடையில் இருந்தார். கடைசி காலத்தில் எங்களுடன் வந்து இருந்துவிட்டார். அவரை அடக்கம் செய்தது மேட்டுப்பாளையத்தில். என் சித்தப்பா உயில் எழுதியதாக சொல்லக்கூடிய சமயத்தில் அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 50 வயது இருக்கும். அவர் ஆரோக்கியமாக இருந்தாரா, உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் , நல்ல நிலையில் தான் இருந்தார். கடைசி காலத்தில் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். கடைசி காலத்தில் எவ்வளவு நாட்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சுமார் 2 வார காலங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். கடைசியாக இரண்டு ஆண்டுகள் எங்கள் வீட்டில் அவர் இருந்தார். அவருக்கு திருமணமும் ஆகவில்லை என்றும் ,குழந்தைகள் இல்லையென்றும்வழக்கில் சொல்லியுள்ளேள் என்றால் சரிதான்.

5. என் சித்தப்பா உயிலை மேட்டுப்பாளையத்தில் வைத்து எழுதினார். நான் உடன் செல்லவில்லை. அவர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அந்த உயில் குறித்து எனக்கு தெரியும். அந்த உயிலை அவர் எப்போது எழுதியதாக அவர் சொன்னார் என்றால் அவர் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக எழுதியதாக சொன்னார். உயிலில் சொத்தின் பரப்பளவு எவ்வளவென உரைக்கப்பட்டுள்ளது என்றால் 2-1/4 ஏக்கர். வழக்கில் சுப்பனுக்கு ஒரு ஏக்கர் 96 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒரு ஏக்கர் 96 செண்ட் நிலத்தின்தான் எனக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான். 2-1/4 ஏக்கர் என்பது சரியா, அல்லது ஒரு ஏக்கர் 96 செண்ட் என்பது சரியா என்றால் எனக்கு அளவு அவ்வளவு சரியாக தெரியவில்லை.

6. உயில் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். அவருக்கு உரிமை இல்லை என்பதால்தான் அது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த உயில் பத்திரம் ஒரு மோசடி பத்திரம் என்றால் சரியல்ல. உயில் பத்திரத்தில் பத்திரத்தாள்கள் மெட்ராஸ், மண்ணடியில் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. பத்திரத்தாள்கள் நான் வாங்கவில்லை. வா.சா.ஆ.1 உயில் பத்திரத்தின் முதல் தாளுக்கான முத்திரை தாள் வெள்ளிங்கிரி என என் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நான்தான் வாங்கினேன் என்றால் சரிதான். இரண்டாவது தாள் சுப்பன் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தாள் சுப்பன் கைவசம் எப்படி சென்றது என்றால் என்னை பத்திரம் வாங்கித்தர சொன்னார், அதற்காக வாங்கி தந்தேன்.

7. அந்த பத்திரத்தை எதற்காக வாங்கி தந்தேன்என்றால் உயில் தயாரிப்பதற்காக கேட்டு அதற்காக வாங்கி தந்தேன். அப்படியிருக்க இரண்டாம் தாள் மட்டும் ஏன் சுப்பனின் பெயரிலுள்ளது என்றால் அவர் பெயரில் ஒரு தாளும் என் பெயரில் ஒரு தாளும் வாங்க சொன்னார், அதனால் அவ்வாறு வாங்கி தந்தேன். நான் சொல்வது போல் குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட விதத்தில் என் சித்தப்பா சுப்பன் உயில் ஆவணமே ஏற்படுத்தி தரவில்லை என்றும் , அவர் இறந்த பிறகு முத்திரை தாள்களை வாங்கி அவரது கையெழுத்தை போட்டு நானாகவே சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக, மோசடியாக ஒரு உயிலை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. அந்த முத்திரை தாள்களை எந்த கடையில் யாரிடம் வாங்கினேன் என்றால் சிறுமுகையில் பழத்தோட்டத்தில் முத்திரை தாள் விற்பவரிடம் வாங்கினேன். அவர் பெயர் ஞாபகமில்லை. சிறுமுகை பழத்தோட்டத்தில் வாங்கியதாக முத்திரை தாளில் குறிப்பிடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. அந்த முத்திரை தாளில் மெட்ரஸிலுள்ள மண்ணடி முத்திரை தாள் விற்பனையாளர் நெல்சன் என்பவரிடம் வாங்கியதாக வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. உயில் பத்திரத்தில் மூன்று பேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். சாட்சி கையெழுத்து போட்டதை நான் பார்த்தேனா என்றால் என் சித்தப்பா சொல்லி எனக்கு தெரியும், பத்திரம் வாங்கிய அன்றே உயில் எழுதப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

9. மூன்று சாட்சிகளின் முகவரி எதுவும் உயிலில் காணப்படவில்லை என்றால் சரிதான். பொய்யான ஆவணம் என்பதால் தான் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட உயிலை அடிப்படையாக வைத்துதான் அசல் வழக்கு எண்.319/2012 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் உயிலை உண்மையானதென விளம்புகை செய்யவேண்டியும், வழக்கு சொத்திற்கு நான்தான் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்யவேண்டியும், பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ராமனின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் நான்தான் சொத்திற்கு உரிமையாளர் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயில் பத்திரத்தில் சொத்து யாருக்கென எழுதப்பட்டுள்ளது என்றால் சொத்து எனக்கென எழுதப்பட்டுள்ளது. அந்த உயில் ஆவணத்தில் அனுபவ பாத்தியதை எனக்கும், எனக்கு பின்னிட்டு என் வாரிசுகளுக்கும் செல்ல வேண்டியதென எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகவே இந்த உயிலின் அடிப்படையில் நான் சொத்திற்கு முழு உரிமையாளராக முடியாது என்றால் சரிதான்.

10. அந்த வழக்கில் என் பிள்ளைகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அனுபவ பாத்தியதை மட்டுமே உள்ள நான் சொத்திற்கு முழு உரிமையாளர் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காரணத்தினாலும் இவ்வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் அவ்வழக்கில் தரப்பினராக இல்லாத காரணத்தாலும் , அவ்வழக்கின் தீர்ப்புரை 1 முதல் 5 பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் அது எனக்கு தெரியவில்லை. அதனால் அதை அடிப்படையாக கொண்டு நான் தாக்கல் செய்த அசல் வழக்கு 174/2016 ன் தீர்ப்பும் 1 முதல் 5 பிரதிவாதிகளையும், 6 ,7 பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

11. எந்த வழக்கிலும் அய்யாகுட்டியின் வாரிசு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அய்யாகுட்டியின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்தால் அவரது உண்மையான வாரிசுகள் யாரென தெரிந்துவிடும் என்பதாலும், அவ்வாறு தெரியவரும் சூழ்நிலையில் வழக்கு சொத்திற்கு நான் உரிமையாளர் இல்லையென்பது தெரிந்துவிடும் என்பதால்தான் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யாமல் தவிர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அய்யாகுட்டிக்கு இரண்டு மனைவிகள் என்றும், அய்யாகுட்டியின் நேரடி வாரிசு ராமன் என்பதன் அடிப்படையில் வழக்கு சொத்திற்கு ராமன்தான் உரிமையாளரென்றும், பதிலுரையில் பிரதிவாதிகள் சொன்ன உரைக்கு மறுப்புரை எதையும் எனது முதல் விசாரணையில் முன்வைக்கவில்லை என்றால் அது

எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட தீர்ப்பாணைகளை பதிவு அலுவலகத்தில் நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். தீர்ப்பு நகல்களை தொடர்ந்து வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. ( வாதி தரப்பு வழக்குரைஞரின் இளவர் வழக்குரைஞர் தனது மூத்த வழக்குரைஞர் இருக்கும் நிலையில் மேலும் குறுக்கு விசாரணையை தொடர்வது நல்லதாக இருக்குமென கேட்டுக்கொண்டதால் இளவர் வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- P.K.Sivakumar**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.